**தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சபை - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுக்கப்பட்ட அபிப்பிராயம்**

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சபையின் (“சபை”) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கவும் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்திற்கு இணங்கவும் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் நிதி அறிக்கைகள் குறித்து நான் எந்த கருத்தையும் தெரிவிக்கவில்லை.எனது அறிக்கையின் மறுக்கப்பட்ட அபிப்பிராயத்தின் பிரிவில் விவாதிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, இந்த நிதி அறிக்கைகள் மீதான கணக்காய்வுக் கருத்துக்கான அடிப்படையை வழங்க போதுமான கணக்காய்வுச் சான்றுகளை என்னால் பெற முடியவில்லை.

**1.2 மறுக்கப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் பந்தி 1.5 இல் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகிறது

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுகின்றன.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பிடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது சபையைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்க்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்க்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றினை விடக் கூடியதாகும்.

- சுந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதீப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது

கவனம் செலுத்துதல் வேண்டும்.எனது கணக்காய்வு அறிக்கை திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதீப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதீப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதி அறிக்கைகளை தயாரிப்பதில் கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதி அறிக்கைகளை தயாரிப்பதில் உள்ளகக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) பின்வரும் காரணங்களால் பலவீனமான கட்டுப்பாட்டு சூழல் காணப்பட்டது.<br><br>(i.) பத்து (10) உயர் முகாமைத்துவப் பதவிகளில் மூன்று (03) செயல்பாட்டின் அடிப்படையில் நிரப்பப்பட்டன. அவை தலைமை நிறைவற்று அதிகாரி, உதவி பொது முகாமையாளர் - நிதி மற்றும் முகாமையாளர் - மறுகாப்பீடு மற்றும் எஸ்.ஆர்.சி.சி ஆகும். மேலும், ஆறு (06) | இடைநீக்கம் செய்யப்பட்ட அதிகாரிகள் மீதான வழக்குகள் காரணமாக தலைமை நிறைவற்று அதிகாரி, உதவி பொது முகாமையாளர் - நிதி ஆகிய பதவிகள் வெற்றிடமாக உள்ளன. முக்கிய பதவி ஆட்சேர்ப்புகளை நிரப்புவதன் மூலம், உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பு பலப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | முக்கிய முகாமைத்துவ பதவிகளை நிரப்பவும் கட்டுப்பாட்டு சூழலை வலுப்படுத்தவும் முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

பணியிடங்கள் வெற்றிடமாக இருந்தன மற்றும் 20 நடுத்தர அளவிலான முகாமையாளர்களில் ஒரு (01) பதவி செயல்பாட்டின் அடிப்படையில் நிரப்பப்பட்டது. சில செயல்பாட்டு அடிப்படை பதவிகள் நீண்ட காலமாகத் தேவையான தகுதிகளையும் அனுபவங்களையும் பூர்த்தி செய்யாத அதிகாரிகளால் நிரப்பப்பட்டு வந்தன. எனவே வலுவான உள்ளக கட்டுப்பாட்டு அபிவிருத்தியின் சாத்தியக்கூறுகள், உள்கட்டுப்பாட்டு முறையை திறம்பட கண்காணித்தல் மற்றும் செயல்படுத்துதல் மற்றும் உள்கட்டுப்பாட்டு முறையை மேம்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல் ஆகியவை குறைவாகவே உள்ளன.

(ii.) அந்த செயற்பாடுகளை மேற்க்கொள்ளுவதற்கு ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையான திறன்களைக் கொண்ட பொறுப்புள்ள பிரிவுகள் மற்றும் அதிகாரிகள் இல்லாத காரணத்தால் மதிப்பீட்டு செயற்பாடு, இடர் முகாமைத்துவ செயற்பாடு மற்றும் முதலீட்டுச் செயற்பாடு ஆகிய செயற்பாடுகள் பயனுறுதி மிக்க வகையில் மேற்க்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனவே, இடர்களை சரியான நேரத்தில் கண்டறிதல் மற்றும் அந்த அபாயங்களை குறைப்பதற்கான உத்திகளைச் செயல்படுத்துதல், உண்மையான மதிப்பீடுகளைச் செய்வதற்கான துல்லியமான தகவல்களை வழங்குதல் ஆகியவை பயனுள்ளதாக இருந்திருக்கவில்லை.

கூட்டிணைக்கப்பட்ட திட்டம் 2023-2027ன் பிரகாரம் மதிப்பீட்டு பிரிவு நிறுவப்படும். இருப்பினும், உள்ளூர் மற்றும் உலகளாவிய சூழலில் முன்னணி மதிப்பீட்டு நிறுவனங்களில் ஒன்றான, நியமிக்கப்பட்ட ஆயுட்கால மதிப்பீட்டாளருக்கு மதிப்பீட்டு செயல்பாடு வெளிக்களம் செய்யப்பட்டது. சபையானது இடர் முகாமைத்துவத்திற்காக ஒரு துணைக் குழுவை நியமித்தது மற்றும் 2023 முதல் இது செயல்படும். அர்ப்பணிப்புள்ள பணியாளர்களைக் கொண்டிருப்பதன் மதிப்பை நாங்கள் அறிவோம் மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், மேலே குறிப்பிட்டுள்ள படி, நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் குறைந்த சம்பள விகிதங்கள் காரணமாக, சரியான நேரத்தில் பொருத்தமான மனித மூலதனத்தை ஈர்க்கும் திறனை மோசமாக பாதித்துள்ளன. உள் கட்டுப்பாடுகளில் இல்லாத பகுதிகள் மற்றும் மோசமான மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு என்பவற்றை

சபையை திறம்பட நடத்துவதற்கு தேவையான வளங்களுடன் அந்த முக்கிய பிரிவுகளை நிறுவவும் செயல்படவும் முகாமைத்துவம் விளைதிறனான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் கண்டறிந்துள்ளது. அதனைத் தொடர்ந்து, அமைப்பு கட்டுப்பாடுகளை மேம்படுத்துவதன் மூலம் அமைப்பு மற்றும் செயல்பாட்டு அபாயத்தைத் தணிக்க ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | |
| (iii.) பெப்ரவரி 2020 முதல் அக்டோபர் 2021 வரை (20 மாதங்கள்) உள்ளகக் கணக்காய்வு செயல்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பின்னர், 01 நவம்பர் 2021 முதல் அமுலுக்கு வரும் வகையில், உதவி முகாமையாளர் - ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுத் திணைக்களம் உள்ளகக் கணக்காய்வாளராக உள்ளக ரீதியாக நியமிக்கப்பட்டார். எவ்வாறாயினும், எந்தவொரு காரணத்தையும் குறிப்பிடாமலோ அல்லது சபைத் தீர்மானம் இல்லாமலோ அவர் 20 செப்டம்பர் 2022 முதல் தனது முந்தைய பதவிக்கு மாற்றப்பட்டார். அதன்பிறகு, எஸ்.ஆர்.சி.சி மற்றும் ரீ.ஆர் துறையின் காப்புறுதி அதிகாரி ஒருவர் 20 செப்டம்பர் 2022 முதல் 14 ஜுலை 2023 வரையிலான காலகட்டத்திற்கு உள் கணக்காய்வாளராக செயல்பாட்டு அடிப்படையில் மாற்றம் செய்யப்பட்டார். தற்போது 15 ஜுலை 2023 முதல் உள்ளக கணக்காய்வாளர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளார். அதன்பிறகு, நிரந்தர அடிப்படையில் உள்ளக கணக்காய்வாளரை ஆட்சேர்ப்பு செய்ததன் பின்னர் கணக்காய்வுக் குழுவின் பரிந்துரை மற்றும் சபையின் அனுமதியின்றி அனுபவம் வாய்ந்த கணக்காய்வு ஊழியர்கள் வேறு பிரிவுகளுக்கு மாற்றப்பட்டிருந்தனர். எனவே, அண்மைக் காலத்தில் சபையில் பலவீனமான உள்ளக கணக்காய்வுச் செயல்பாட்டு வரலாறு காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மேலும், | பிரிவின் தலைவர் பதவி வெறுமையாக இருப்பதால் உள்ளக கணக்காய்வு செயல்படவில்லை என்பதை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் ஒப்புக்கொள்கிறது. ஊழியர் இடமாற்றத்திற்கு தேவையான நடைமுறை பின்பற்றப்பட்டது. | உள்ளகக் கணக்காய்வின் திறமையான செயல்பாட்டை முகாமைத்துவம் உறுதி செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வுக் குழு நடத்தப்பட்டிருக்காததுடன் மீளாய்விற்கு உட்பட்ட ஆண்டிற்கு 03 கணக்காய்வுக் குழுக்கள் மட்டுமே நடத்தப்பட்டிருந்தன. எனவே, உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்புகளின் மீள்திருத்தம் மற்றும் மதிப்பீடு, இடர் முகாமைத்துவம் மற்றும் இணக்கச் செயல்பாடுகள் மற்றும் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்குவதை உறுதிசெய்வதற்கான நிதி அறிக்கைகளின் மதிப்பாய்வு போன்ற உள்ளகக் கணக்காய்வுச் செயல்பாடுகள் திறம்பட மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (iv.) அக்ரஹாரா காப்புறுதித் திட்டத்தில் ஊழியர் ஒருவர் செய்த மோசடி தற்செயலாக அக்டோபர் 2022 இல் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த மோசடி 2018 ஆம் ஆண்டு முதல் செய்யப்பட்டுள்ளது மற்றும் உள்ளக கணக்காய்வு அறிக்கையின் படி கண்டுபிடிக்கப்பட்ட நிதி இழப்பு ரூபா.5,136,000 ஆகும். தற்போது, நிறுவனத்தின் உள்ளக விசாரணைகளின் பிரகாரம், ஏனைய 13 அதிகாரிகளும் இது போன்ற மோசடிகளில் ஈடுபட்டு, வெளிப்படுத்திய நிதி இழப்பின் பெறுமதி ரூபா.6,572,300 ஆகும். முறையான மேற்பார்வை மற்றும் கண்காணிப்புடனான உறுதியான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் வடிவமைப்பு மற்றும் செயல்படுத்தல் என்பவற்றின் பற்றாக்குறையினால் இது நடந்தது. தற்போது மோசடி செய்தவரிடமிருந்து இழப்பு ரூபா.5,746,571 மீட்கப்பட்டது மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் இன்னும் நடந்து வருகின்றன. எவ்வாறாயினும், முதலீட்டு வருமான இழப்பு காரணமாக சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை | மோசடி இழப்பானது நீதிமன்ற நடைமுறைகளிலிருந்து பின்னர் மீட்கப்பட்டது. | மோசடிகளைத் தவிர்ப்பதற்கும், மோசடிகளைக் கண்டறிவதற்கும், மோசடி அபாயத்தைக் குறைப்பதற்கும் உள்ளகக் கட்டுப்பாட்டின் உறுதியான அமைப்பை முகாமைத்துவம் உறுதி செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| மீட்பதற்காக மோசடி செய்தவருக்கு எதிராக அபராதம் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) உரிமைக்கோரல் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது முதல் உரிமைக்கோரல்களைத் தீர்ப்பது வரையான அக்ரஹாரா உரிமைக்கோரல்களை கையாள்வதற்கான ஒருங்கிணைந்த முறைமை சபைக்கு கிடைப்பனவு அற்றதாக இருக்கிறது. எனவே, உரிமைகோரல் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதில் முறைகேடுகள், உரிமைகோரல் தகவல் இழப்பு, பிழைகளை சரிசெய்வதில் தாமதம் மற்றும் உரிமைகோரல் செயல்முறையில் தேவையற்ற தாமதம் ஆகியவை ஏற்பட்டிருந்தன. சமீப காலங்களில், உரிமைகோரல் கையாளுதல் செயல்முறையின் வினைத்திறன் மற்றும் விளைதிறனை மேம்படுத்த சபை நடவடிக்கை எடுத்திருந்தது. இருப்பினும், மேற்கூறிய முன்னேற்றங்களின் வெற்றியை அளவிடுவதற்கு கணிசமான நேரம் எடுக்கப்படும். | எவ்வாறாயினும், உரிமைகோரல் பொறுப்பை ஏற்றுக்கொள்வது மற்றும் அடையாளம் காண்பது தவிர, அக்ரஹார உரிமைகோரல் பிரிவு ஒரு ஒருங்கிணைந்த அமைப்புடன் செயல்படுகிறது, இது உரிமைகோரல் செயல்முறையின் முதல் கட்டமாக செய்யப்படுகிறது. உரிமைகோரல் செயலாக்க அமைப்பு மாற்றங்களின் இந்த ஆரம்ப நிலைகளானது 2023 - 2027 கூட்டிணைக்கப்பட்ட திட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு தற்போது முன்னேற்றமடைந்து வருகிறது. அக்ரஹார உரிமைகோரல் செயலாக்கம் தற்போது ORACLE அமைப்பைப் பயன்படுத்தி செய்யப்படுகிறது. இருப்பினும், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் ஏற்கனவே இடைவெளிகளையும், உடனடியாக உருவாக்க வேண்டிய பகுதிகளையும் கண்டறிந்துள்ளது. உண்மையில், அமைப்பில் சில மாற்றங்கள் சமீபத்தில் செய்யப்பட்டுள்ளன. மேலும் நிதியமைச்சின் ஆதரவுடன், உள்ளக கட்டுப்பாட்டுச் சிக்கல்கள், தகவல் தொழில்நுட்பக் கட்டுப்பாடுகள், தொழில்நுட்பத் தேவைகள் மற்றும் உரிமைகோரல் செயலாக்கத்தை விரைவுபடுத்துவதற்கான இடைவெளிகளைக் கண்டறிவதற்காக நிபுணருடன் ஒரு குழு உருவாக்கப்பட்டது. மேற்படி அமுலாக்கத்தின் முதல் கட்டமாக கண்ணாடி உரிமைகோரலை நிகழ்நிலையில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. | அக்ரஹார காப்புறுதித் திட்டத்திற்காக உறுதியான உள் கட்டுப்பாட்டு அமைப்பை அறிமுகப்படுத்த முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (இ) வேலைநிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத நிதியம்(SRCC & Tr Fund) ஆகியவற்றின் கொடுக்கல் வாங்கல்கள் மூல ஆவணங்களைப் பயன்படுத்தி | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அவதானிப்புடன் உடன்படுகிறது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் தற்சமயம் சேஜ் கணக்கியல் முறையை புதுப்பித்து வருகிறது, மேலும் எதிர்காலத்தில் இதனை | முகாமைத்துவம் நிதித் தகவல் அமைப்புகளை சரியான நேரத்தில் புதுப்பிப்பதை உறுதிசெய்து |

| | | | |
|---|---|---|---|
| | எக்செல் கோப்புக்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மற்றும் ஆண்டின் இறுதியில் எக்செல் கோப்புக்களில் பதிவு செய்யப்பட்ட அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் கையேட்டு பேரேட்டிற்கு புதுப்பிக்கப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டன. 2019 ஆம் ஆண்டில் SAGE கணக்கியல் முறைமையில் இந்த வசதி வழங்கப்பட்டிருந்தாலும், வேலைநிறுத்தம் கலவரம் சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத நிதியத்தின் (SRCC & Tr Fund) நிதி அறிக்கை செயல்முறைக்கு நிகழ்நேர அடிப்படையில் அந்த வசதி பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனவே, இரு அமைப்புகளிற்கு இடையேயும் ஒரே தரவு செயலாக்கத்தின் போது நகல் வேலைகள் மற்றும் தரவு நகல்களின் அதிக ஆபத்து மற்றும் வழுக்கள் ஏற்படலாம். எனவே, எஸ்.ஆர்.சி.சி மற்றும் ரீ.ஆர் நிதியத்தின் நிதித் தகவலில் குறைந்த அளவிலான தரவு நேர்மை இருப்பதாகத் தோன்றுகிறது. | இறுதி செய்ய முடியும். | தகவல் ஒருமைப்பாட்டை உறுதி செய்ய வேண்டும். |
| (ஈ) | அக்ரஹாரா சாதாரண, வெள்ளி மற்றும் தங்கம் ஆகிய திட்டங்களுக்கான அக்ரஹாரா காப்புறுதித் திட்டப் பங்களிப்பானது நிதி அறிக்கைகளில் ஒரு வருமானப் உருப்படியாக இனங்காணப்பட்டிருந்தது. அக்ரஹார வருமான சேகரிப்பு அமைப்பில் முறையான மற்றும் புதுப்பிக்கப்பட்ட தரவுத்தளம் மற்றும் முறையான பொறிமுறை மற்றும் இணக்க செயல்முறை என்பவை காணப்படவில்லை. எனவே, ஒவ்வொரு அக்ரஹாரா காப்புறுதித் திட்டங்களிற்கும் அளிக்கப்பட்ட பங்களிப்புகளிற்கான தகவல்களைப் பெறுவதும் மற்றும் | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் ஆனது விரிவான புதுப்பிக்கப்பட்ட தரவுத் தளம் கிடைக்காததன் அடிப்படையில் அவதானிப்புடன் உடன்பட்டது. இருப்பினும், தற்போதுள்ள அமைப்பில், சில நிறுவனங்களைத் தவிர, அக்ரஹார சாதாரண, வெள்ளி மற்றும் தங்க தவணைப்பணங்கள் தனித்தனியாக வழங்கப்பட முடியும்.எவ்வாறாயினும், நிதி அமைச்சின் ஆதரவுடன் ஒரு புதிய விரிவான தகவல் அமைப்பு செயல்ப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் டிசம்பர் 2022 முதல் செயல்பாட்டில் உள்ளது. அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவை 2023 முதல் கிடைப்பனவாக இருக்கும். | அக்ரஹார காப்புறுதித் திட்டத்திற்கான தவணை வசூல் மற்றும் உரிமைக்கோரல் செயலாக்கத்திற்கான பயனுறுதி வாய்ந்த அமைப்பை உறுதி செய்ய முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஒவ்வொரு நிறுவனத்தாலும் ஒவ்வொரு காப்புறுதி பத்திர உரிமையாளராலும் நிதியத்திற்கு வழங்கிய மாதாந்த பங்களிப்புக்களின் விரிவான பதிவைப் பெறுவதும் கடினமாகும். மேலும், அக்ரஹாரா வருமான சேகரிப்பு செயல்முறைக்கு சபை சில சமீபத்திய முன்னேற்றங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும், இதன் வெற்றிக்கு கணிசமான நேரம், வளங்கள் மற்றும் சபை மற்றும் இணைக்கப்பட்ட நிறுவனங்களின் முகாமைத்துவத்தின் பொறுப்புகள் தேவைப்படும். | | |
| (உ) செலுத்த வேண்டிய மீள்காப்புறுதி உரிமைக்கோரல்கள் ரூபா.3,283,936,585 மற்றும் செலுத்திய மீள்காப்புறுதி உரிமைக்கோரல்கள் ரூபா.1,153,035,170 என்பவற்றின் நிதித் தகவல்கள் எக்செல் தாள்களில் கைமுறையாக பராமரிக்கப்பட்டிருந்தது. எனவே, மீள்காப்புறுதிப் பிரிவில் கொடுக்கல் வாங்கல்களை கையாள்வதற்கும் பதிவுகளை பேணுவதற்கும் முறையான அமைப்பு இல்லாததை அவதானிக்க முடிந்தது. மீள்காப்புறுதிப் பிரிவில் நிதித் தகவல் அறிக்கையிடலில் உள்ள பலவீனங்கள் காரணமாக இது தரவு ஒருமைப்பாட்டின் அதிக ஆபத்தை உருவாக்குகிறது. மேலும், மீள்காப்புறுதி உரிமைகோரல்களை சேகரிப்பதற்கான சரியான நேரத்திலான நடவடிக்கைகள் மற்றும் அந்தத் தகவலின் துல்லியம் என்பவை கேள்விக்குரியதாக உள்ளது. | தற்போதுள்ள எந்த அமைப்பும் இல்லாவிட்டாலும், தரவுகளின் துல்லியம் மற்றும் முழுமையை உறுதிப்படுத்த பொதுவான கட்டுப்பாடுகள் உள்ளன. Sage ACCPAC இன் கொடுக்க வேண்டிய கணக்குகள் தொகுதி தற்போது உரிமைக்கோரல் செயல்முறைகளுக்காக செயல்பாட்டில் உள்ளது. மேலும், கூட்டிணைக்கப்பட்ட திட்டம் 2023-2027 இன் படி மீள் காப்புறுதி பிரிவின் உரிமைகோரல் கையாளுதலுக்கான அமைப்பை தற்போது உருவாக்கும் பணியில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் ஈடுபட்டுள்ளது. | முகாமைத்துவமானது பயனுறுதிவாய்ந்த அறிக்கையிடல் முறைமை இருப்பதை உறுதி செய்ய வேண்டும். |
| (ஊ) பலமுறை கணக்காய்வு மூலம் விசாரணைகள் செய்யப்பட்டிருந்தாலும், ஒரு ஊழியர் கடன் பதிவேடு | 2021 ஆம் ஆண்டின் கணக்காய்வினுடைய கணக்காய்வுப் பரிந்துரைக்குப் பிறகு, எக்செல் கோப்பிற்கு கூடுதலாக, தகவலின் | ஊழியர்களின் கடன் பதிவேட்டை கைமுறையாக அல்லது மின்னணு |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு பதிலாக, ஒரு ஊழியர் கடன் பதிவேடு எக்செல் கோப்பு வடிவமாக தயாரிக்கப்பட்டிருந்தது, இது அங்கீகரிக்கப்படாத மாற்றங்களின் சாத்தியக்கூறுகள் , வரலாற்றில் உள்ள தகவல்களின் நீக்கம் மற்றும் பதிப்பித்தல் போன்ற பதிவு செய்யப்பட்ட சம்பவங்கள் மற்றும் தகவலின் வரலாற்றின் துல்லியத்தை சரிபார்க்க இயலாமை போன்ற காரணங்களால் குறைந்த அளவிலான தரவு ஒருமைப்பாட்டிலிருந்து ஏற்றுக்கொள்ளவும் நம்பவும் முடியாது உள்ளது. நிதி அறிக்கைகளின் படி 31 டிசம்பர் 2022 இல் ஊழியர்களின் மொத்தக் கடன்கள் ரூபா. 49,815,840 ஆகும். | துல்லியத்திற்காக ஒரு கையேட்டு பதிவேடு தனியாக பராமரிக்கப்படுகிறது. | முறையில் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் பராமரிக்க முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (எ) | அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கான செயல்பாட்டுக் கையேட்டின் (SOEs) வழிகாட்டுதல்கள் 2.3 இன் படி, அனைத்து SOE களும் அவற்றின் சொந்த அமைப்புகள், செயல்முறைகள் மற்றும் நெறிமுறைகளை அனைத்து முக்கிய செயல்பாடுகளையும் உள்ளடக்கிய கையேடுகளில் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும், அவை அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்படுகின்றன. இருப்பினும், அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் அமைப்புக் கொள்கை சபைக்கு கிடைப்பனவாக இருக்கவில்லை. எனவே, IT பாதுகாப்புக் கொள்கை, பதிவுகள் முகாமைத்துவக் கொள்கை, வணிகத் தொடர்ச்சி முகாமைத்துவம் மற்றும் பேரிடர் மீட்புத் திட்டம், மீறல் பதில் திட்டம் மற்றும் தனியுரிமைக் | வழிகாட்டுதலின் பிரகாரம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் அமைப்பு கொள்கை உருவாக்கப்படும். | அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் அமைப்புக் கொள்கையைச் செயல்படுத்த தேவையான நடவடிக்கைகளை முகாமைத்துவம் எடுக்க வேண்டும். |

கொள்கை ஆகியவை சபைக்கு கிடைப்பனவாக இருக்கவில்லை. எனவே, இது செல்லுபடியாகும் தன்மை, முழுமை, ஒருமைப்பாடு, பாதுகாப்பு மற்றும் தரவு மற்றும் செயலாக்கப்பட்ட தகவல்களின் கிடைப்பனவுத் தன்மையை பாதிக்கும்.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறிப்பிட்ட தரநியம குறிப்புடன் இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) இ.க.நி (LKAS) 07 – காசுப்பாய்ச்சல் கூற்று**<br>(i) நியமத்தின் பந்தி 06 இன் பிரகாரம், செயல்பாட்டு நடவடிக்கைகள் என்பது நிறுவனத்தின் முக்கிய வருமானம்-உற்பத்தி செய்யும் செயல்பாடுகள் மற்றும் முதலீடு அல்லது நிதி நடவடிக்கைகள் இல்லாத பிற செயல்பாடுகள் ஆகும். எவ்வாறாயினும், தேறிய சாதகமற்ற நியாயமான பெறுமதி மாற்றத்தின் உரிமை (பிற விரிவான வருமானம்) மாற்றங்களின் அறிக்கையில் செய்யப்பட்ட சீராக்கங்கள் ரூபா.2,796,453,741 ஆகும், இது வரிக்கு முந்தைய இலாபத்தில் எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை, செயல்பாட்டு நடவடிக்கைகளின் காசுப்பாய்ச்சல்களின் கீழ் சீராக்கப்பட்டது. | இந்த சீராக்கம் வரிக்கு முந்தைய இலாபத்திலிருந்தான விலக்கு அல்ல என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த நியாயமான பெறுமதி இலாபம் மற்றும் முந்தைய ஆண்டு ஆகியவை பிற விரிவான உருப்படிகளிலிருந்து வந்த சீராக்கம் ஆகும், அவை வரிக்கு முந்தைய லாபத்தின் ஒரு பகுதியாக இல்லை மற்றும் பிற செயல்பாட்டு காசுப்பாய்ச்சல்களில் வருவதில் சேர்க்கப்பட வேண்டும். வேறு விதமாக கூறுவதானால், வரிக்கு முந்தைய லாபம் இந்த சீராக்கங்களைச் சேர்க்காததால் இது சீராக்கப்பட்டது. | முகாமைத்துவம் தரநியமத்தின் பிரகாரம் தேவையான காசுப்பாய்ச்சல் வெளிப்படுத்தல் களை செய்ய வேண்டும். |
| (ii) நியமத்தின் பந்தி 20 இன் பிரகாரம், செயல்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து தேறிய காசுப்பாய்ச்சலானது காசு அல்லாத உருப்படிகளின் தேய்மானம், ஒதுக்கீடுகள் மற்றும் உணரப்படாத வெளிநாட்டு நாணய ஆதாயங்கள் மற்றும் இழப்புகள் போன்றவற்றின் விளைவுகளுக்கு லாபம் அல்லது இழப்பை சீராக்குவதன் மூலம் | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அவதானிப்புடன் உடன்படுகிறது. பணிக்கொடை மற்றும் உணரப்படாத பரிமாற்ற இலாபங்கள் அதற்கேற்ப சரிசெய்யப்படும். | |

| | | |
|---|---|---|
| தீர்மானிக்கப்படுகிறது. எவ்வாறாயினும், செயல்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து தேறிய காசுப்பாய்ச்சலினைப் பெறும் போது சபையானது உணரப்படாத பரிமாற்று இலாபம் ரூபா.1,340,224,161 இனை சீராக்கவில்லை. | | |
| (iii) கணக்காய்வின் கணித்தலின் பிரகாரம், செயற்பாட்டுப் பொறுப்புகளில் மாற்றத்தின் கீழ் மற்ற பொறுப்புகளில் அதிகரிப்பு/(குறைவு) ரூபா.779,228,773 ஆகும். இருப்பினும், காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் மற்ற பொறுப்புகளில் அதிகரிப்பு/(குறைவு) ஆனது ரூபா.15,634,934 அதிகரிப்பாகும். எனவே, ரூபா.763,593,839 வித்தியாசமானது அவதானிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்காக செலுத்த வேண்டிய வருமான வரி ரூபா.716,489,107 அதிகரிப்பை சபை கருத்தில் கொள்ளாததால் இந்த வேறுபாடு ஏற்பட்டது. | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அவதானிப்புடன் உடன்படுகிறது. | |
| **(ஆ) இ.க.நி 24 – தொடர்புடைய கட்சி வெளிப்பாடுகள்**<br><br>(i.) நியமத்தின் பந்தி 3 இன் பிரகாரம், நிதி அறிக்கைகளில் தொடர்புடைய கட்சி உறவுகள், கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் கடப்பாடுகள் உட்பட நிலுவையில் உள்ள மீதிகளை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட தரப்பினரை அடையாளம் காணவும், தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்களை அடையாளம் காணவும் சபைக்கு உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பு இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.<br><br>(ii.) மேலும், நியமத்தின் பந்தி 13 இன் பிரகாரம், தொடர்புடைய தரப்பினருடனான உறவுகள் மற்றும் அவர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் குறித்து எந்த வெளிப்பாடும் செய்யப்பட்டிருக்கவில்லை. மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் அடையாளம் காணப்பட்ட தொடர்புடைய தரப்பினர் மற்றும் தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் சில பின்வருமாறு. | பீஈடி சுற்றறிக்கை எண் 3/2015 இன் பிரகாரம் அனைத்து படிகளும் இயக்குநர்கள் மற்றும் தவிசாளருக்கு வழங்கப்படுகின்றன மற்றும் அவர்களின் படிகளை அதிகரிக்க அந்த இயக்குநர்கள் மீது எந்த கட்டுப்பாடும் இல்லை. திறைசேரிப் பங்களிப்பு மற்றும் ஒருங்கிணைந்த நிதியத்திற்கு மாற்றப்பட்ட பணம் ஆகியவை குறித்து நிதி அறிக்கைகளில் தொடர்புடைய உருப்படிகளாக நிதி அறிக்கைகளில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டன. எனவே, இந்த தகவல் நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகளில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இ.க.நி 24 இன் பந்தி 11 இன் பிரகாரம், | முகாமைத்துவம் தரநியமத்தின் பிரகாரம் தேவையான தொடர்புடைய கட்சி வெளிப்படுத்தல்களை செய்ய வேண்டும். |

| தொடர்புடைய கட்சி | உறவு | கொடுக்கல் வாங்கல்கள் | ரூபா./ஐ.அ.டொலர் | |
|---|---|---|---|---|
| ஏசியன் மீள்காப்புறுதி கோப்ரேசன் | உறுப்பு நாடு மற்றும் பேரவை பிரதிநிதி | முதலீடு<br>செலுத்திய மீள் காப்புறுதி தவணை | ஐ.அ.டொலர் 980,000<br>ரூபா. 28,383,473 | இயக்குநர்கள் மற்றும் தொடர்புடைய அமைச்சு தொடர்புடைய கட்சிகளாக கருதப்படுவதில்லை. துணைப்பிரிவு (a) மற்றும் c(iv) ஐப் பார்க்கவும். அரசாங்கத்தின் துறைகள் மற்றும் முகவர்கள், அறிக்கையிடும் நிறுவனத்தை கட்டுப்படுத்தவோ, கூட்டாகக் கட்டுப்படுத்தவோ அல்லது குறிப்பிடத்தக்க செல்வாக்கு செலுத்தவோ இல்லை, வெறுமனே ஒரு நிறுவனத்துடனான அவர்களின் இயல்பான செயல்பாட்டின் காரணமாக அவை ஒரு நிறுவனத்தின் செயல்பாட்டு சுதந்திரத்தை பாதிக்கலாம் அல்லது அதன் முடிவெடுப்பதில் பங்கேற்கலாம். |
| திரு.மவாஹிப் மௌஜூத் (05.02.2020 - 20.05.2023)<br>சபையின் மற்ற உறுப்பினர்கள் | தவிசாளர்<br>சபை உறுப்பினர்கள் | குறுகிய கால ஊழியர் நன்மைகள் | ரூபா. 2,692,735 | |

### 1.5.3 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ)மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கு ரூபா.138,603,776 ஐ SLDB மீதும் SLDB மீது பெற வேண்டிய வட்டி என்பவற்றில் சபையானது குறைமதிப்புச் செய்துள்ளது. எவ்வாறாயினும், SLDB மீதான குறைமதிப்பிற்கான ஒதுக்கீட்டை இனங்காண்பதற்கான கணக்கீட்டுக் கொள்கையை சபை வெளியிடவில்லை. | கொள்கை எண்: 19 இன் கீழ், நிதி முதலீடுகள், சுருக்க அட்டவணை, முதிர்வு வரை வைத்திருக்கும் இலங்கை அபிவிருத்தி முறி தெளிவாக வகைப்படுத்தப்பட்டு வெளிப்படுத்தப்பட்ட நிதிக் கருவிகளின் வகை இதில் அடங்கியுள்ளது. | நிதி அறிக்கைகளில் இலங்கை அபிவிருத்தி முறியின் குறை மதிப்பீட்டை இனங்கண்டு அளவிடுவதற்கான கணக்கீட்டு கொள்கையை வெளிப்படுத்த முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

### 1.5.4 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 18 ஏப்ரல் 2023 கணக்காய்வுத் திகதியின் பிரகாரம் வங்கி இணக்கக் கூற்றில் இணைக்கப்பட்ட காசேட்டு படி மீதிக்கும் அமைப்பின் பிரகாரம் காசேட்டு படி மீதிக்கும் இடையே பதினொரு (11) மாதங்கள் தொடர்பாக ஒரு வங்கிக் கணக்கில் ரூபா.9,770,983 வித்தியாசம் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | இந்த அவதானிப்புக்கு பதிலளிக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு இன்னும் விரிவான தகவல்கள் தேவை. | முகாமைத்துவம் சரியான நேரத்தில் வங்கி மீதியில் உள்ள வேறுபாடுகளைக் கண்டறிந்து, அந்த வேறுபாடுகளை சரிசெய்ய உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

### 1.5.5 அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல் விபரம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 27 செப்டம்பர் 1989 திகதியிட்ட அமைச்சரவை தீர்மான எண். 1989/107(85) மற்றும் 25 மார்ச் 2008 திகதியிட்ட அசாதாரண வர்த்தமானி எண். 1542/11 இன் பந்தி 3(1) இன் பிரகாரம், முதன்மை காப்புறுதிக் கம்பனிகளால் வேலைநிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாதம் (SRCC & Tr) ற்கான காப்புறுதிக் கொள்கைகளை வழங்குவதில் இருந்து வசூலிக்கப்படும் தவணைப்பணமானது நிதியத்தில் செலவு வைக்கப்படும். எவ்வாறாயினும், அந்த காப்புறுதி தவணைப்பணத்திலிருந்து மோட்டார் காப்புறுதியில் 12 சதவீதமும், மோட்டார் அல்லாத காப்புறுதியில் 80 சதவீதமும் மட்டுமே சபை வசூலித்துள்ளது. எனவே, ஆண்டிற்கான மொத்த எழுதப்பட்ட தவணைப்பணமானது ரூபா.12,369,745,744 ஆல் குறைத்து மதிப்பிடப்பட்டிருந்தது. 2005 இல், இந்த நிதியம் சபையிடம் ஒப்படைக்கப்பட்டபோது, SRCC &Tr நிதி 10.9 பில்லியன் ரூபாயாக இருந்தது. 2022 ஆம் ஆண்டில், நிதி 17.8 பில்லியன் ரூபாவாக இருந்தது. மேற்படி சட்ட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த நிதியத்தில் திரட்டப்படும் அனைத்து நிதிகளும் பெறப்பட்டிருந்தால், இந்த நிதி 68.9 பில்லியன் ரூபாவாக இருந்திருக்க வேண்டும். இதன்படி, கடந்த 17 வருடங்களில் நிதியத்தினால் ஏற்பட்ட நட்டம் அண்ணளவாக 51 பில்லியன் | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தால் கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாதம் (SRCC & Tr) இன் தொடக்கத்திலிருந்தே மோட்டார் வகுப்பிற்காக செயல்படுத்தப்பட்ட மோட்டார் XOL ஏற்பாட்டின் படி தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன்படி, அவ்வப்போது மோட்டார் வகுப்பு அதிகப்படியான இழப்பு ஏற்பாட்டின் (XOL) கீழ் வசூலிக்கப்படும் தவணைப்பணத்தின் சதவீதம் தீர்மானிக்கப்பட்டது, இதனால் சபைத் தீர்மான எண். 53-16 தவணைப்பணமாக பெறப்பட்ட பணம் காப்புறுதிக் கம்பனிகளால் சேகரிக்கப்பட்ட மொத்த தவணைப்பணத்தில் 12% ஆகும். இருப்பினும், 12% ஐ முடிவு செய்வதற்கு முன், அதே ஆண்டில் மொத்த தவணைப்பணத்தில் 15% கோரப்பட்டது, அந்த முடிவை தொழில்துறையினர் எதிர்த்ததால் அது இறுதியாக 12% ஆகக் | சபையானது காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து வேலைநிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாதம் (SRCC & Tr) தவணைப் பணத்தைத்தை பொருந்தக்கூடிய சட்ட விதிகளின் படி வசூலிக்கும். |

ரூபாவாகும். கடந்த 17 ஆண்டுகளில் நிதியம் தொடர்பான அனைத்து நிதிகளும் பெறப்பட்டிருந்தால், நிதியத்தின் பயனுறுதிவாய்ந்த வளர்ச்சி 11.5 சதவீதமாக இருந்திருக்க வேண்டும். எவ்வாறாயினும், நிதியத்தின் தற்போதைய பயனுறுதிவாய்ந்த வளர்ச்சி 3 சதவீதமாக மட்டுமே காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. 2006 ஆம் ஆண்டு நிதியமைச்சினால் நிதியத்தின் நிர்வாகம் சபைக்கு மாற்றப்பட்டபோதும் இந்த நடைமுறை தொடரப்பட்டதாக சபையின் முகாமைத்துவம் தெரிவிக்கின்றனர். மேலும், 11 மே 2023 மற்றும் 03 அக்டோபர் 2023 ஆகிய திகதிகளில் பொது முயற்சிகளுக்கான குழுவில் (COPE) இந்த விடயம் விவாதிக்கப்பட்டது மற்றும் அமைச்சரவையின் முடிவைப் புறக்கணித்ததன் மூலம் ஒரு அடிப்படை தவறு ஏற்பட்டுள்ளதாக COPE கருதியது. இருப்பினும், இந்த விடயத்தைத் தீர்க்க பயனுள்ள நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. மேலும், 2006 ஆம் ஆண்டு நிதியத்தை சபைக்கு மாற்றிய போது, நிதியமைச்சினால் இந்த நிதியத்தின் முகாமைத்துவம் தொடர்பான ஆவணங்கள் சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, இந்த அடிப்படைத் தவறு நிகழ்ந்த காலத்தையும், இதற்குப் பொறுப்பான நபர்களையும் கண்டறிவது கடினமாக இருந்தது.

குறைக்கப்பட்டது. 2021 இல் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் முகாமைத்துவமானது XOL ஏற்பாட்டின் தற்போதைய நடைமுறையை இடைநிறுத்துவதற்கான வாய்ப்பைக் குறிப்பிட்டது. ஆகவே, மோட்டார் தவணைப்பணத்தை வசூலிப்பதற்கான தற்போதைய நடைமுறையை மாற்றி, 01 ஏப்ரல் 2022 முதல் 100% தவணைப்பணத்துடன் மோட்டார் காப்புறுதி வகுப்பில் சபை பத்திர எண். 172-03 இன் படி 100% பொறுப்பை ஏற்க முடிவு செய்யப்பட்டது. இந்த அமுலாக்கத்திற்கு தொழில்துறையினர் எதிர்ப்பு தெரிவித்ததால், அது ஒத்திவைக்கப்பட்டது. சபைத் தீர்மான எண். 189-1 இன் பிரகாரம், மோட்டார் காப்புறுதிக் கொள்கைகளில் 100% தவணை 01 ஜனவரி 2023 முதல் நடைமுறைப்படுத்தப்படும். அத்துடன் மீண்டும் தொழில்துறையினர் 01 அக்டோபர் 2023 முதல் அமுலாக்கத்திற்கு வரும் திகதியை மாற்றுமாறு கோரி கடிதம் எழுதியுள்ளனர்.

### 1.5.6 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது பதிவுகள்

| உருப்படி | நிதிக் கூற்றின் பிரகாரம் ரூபா. | தொடர்புடைய பதிவின் பிரகாரம் ரூபா. | வித்தியாசம் ரூபா. | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ)மீள்காப்புறுதிக்கான நிலுவையில் உள்ள உரிமைகே | 3,257,556,048 | 3,084,608,000 | 172,948,048 | கொடுக்க வேண்டிய மீள்காப்புறுதி உரிமைக்கோரல்களுக்கான மூன்றாம் தரப்பு உறுதிப்படுத்தல்களைப் | முகாமைத்துவமானது வேறுபாடுகளைக் கண்டறிந்து அவற்றைச் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ாரல் ஒதுக்கீடு | | | | பெற தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் ஏற்கனவே மின்னஞ்சல்களை அனுப்பியுள்ளது. இருப்பினும், நிலுவையில் உள்ள அனைத்து உறுதிப்படுத்தல்களும் பின்பற்றப்பட்டு வருகின்றன, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அந்த உறுதிப்படுத்தல்களைப் பெற்றவுடன், அவை NAO க்கு அனுப்பப்படும். | சரிசெய்வதற்காகத் தங்களின் நிதிப் பதிவுகளை மற்ற தொடர்புடைய பதிவுகளுடன் சரியான நேரத்தில் இணக்கம் செய்ய வேண்டும். |
| (ஆ)பெறவேண்டிய நிலுவையிலுள்ள உள் நோக்கிய மீள்காப்புறுதி தவணை மற்றும் பெறவேண்டிய எஸ்.ஆர்.சி.சி & ரீ.ஆர் | 4,988,247,662 | 5,665,899,000 | 677,651,338 | பெறவேண்டிய மீள்காப்புறுதி தவணைகளுக்கான மூன்றாம் தரப்பு உறுதிப்படுத்தல்களைப் பெற தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் ஏற்கனவே மின்னஞ்சல்களை அனுப்பியுள்ளது. இருப்பினும், நிலுவையில் உள்ள அனைத்து உறுதிப்படுத்தல்களும் பின்பற்றப்பட்டு வருகின்றன, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அந்த உறுதிப்படுத்தல்களைப் பெற்றவுடன், அவை NAO க்கு அனுப்பப்படும். இருப்பினும், சரிபார்ப்புகளுக்கான மாற்று நடைமுறை முன்பு NAO அதிகாரிகளால் செய்யப்பட்டது போல மேற்கொள்ள முடியும். | |

### 1.5.5 கணக்காய்விற்கு உரிய ஆவணச் சான்றின் கிடைப்பனவு அற்றதன்மை

| விடயம் | தொகை (ரூபா) | கிடைப்பனவு அற்ற ஆவணச்சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ)கூடுதல் கட்டண வரிச் | 1,196,274,044 | உள்நாட்டு இறைவரித் திணைக்களத் | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அவதானிப்புடன் உடன்படுகிறது. | திறமையான கணக்காய்வுச் செயல்பாட்டிற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | துடனான எழுத்துப்பூர்வ தகவல் அல்லது உள்நாட்டு இறைவரித் திணைக்களத் திடமிருந்து உறுதிப்படுத்தல் | | சரியான நேரத்தில் தகவல் கிடைப்பதை முகாமைத்துவம் உறுதி செய்ய வேண்டும். |
| (ஆ)பெறவேண்டிய வருமான வரி | 22,465,243 | வரிக் கணக்கீடு மற்றும் உறுதிப்படுத்தல்கள் | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் ஏற்கனவே தேவையான விபரங்களைச் சமர்ப்பித்துள்ளது. | |
| (இ)பெறவேண்டிய வாடகை வைப்பு | 2,180,969 | கொடுப்பனவுக் கைச்சாத்து மற்றும் உடன்படிக்கைகள் | இந்த அவதானிப்புக்குத் தேவையான தகவல்களை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் வழங்கும். | |
| (ஈ)நீண்ட கால நிலுவையில் உள்ள செலுத்த வேண்டிய மீதி | 785,493,566 | விலைப்பட்டியல்கள், உடன்படிக்கைகள் | இந்த அவதானிப்புக்கு பதிலளிக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு இன்னும் விரிவான தகவல்கள் தேவை. | |
| (உ)கொடுப்பனவுக் கைச்சாத்து | 2,139,623 | துணை ஆவணங்களுடனான பதின்மூன்று (13) கொடுப்பனவுக் கைச்சாத்துக்கள் | இந்த அவதானிப்புக்கு பதிலளிக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு இன்னும் விரிவான தகவல்கள் தேவை. | |

### 1.5.7 பெற வேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ)பெற வேண்டிய மீள் காப்புறுதி தவணை ரூபா.267,629,300 தொகையானது ஒரு (01) வருடத்திற்கு மேலாக நிலுவையில் உள்ளது. இது பெற வேண்டிய மொத்த மீள் காப்புறுதி தவணையில் 15 வீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. | காப்புறுதி கம்பனிகளுக்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் மாதந்தோறும் நினைவூட்டல்களை அனுப்புகிறது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் உரிமைகோரல்களைத் தீர்க்கும் நேரத்தில், இந்த பெறவேண்டியவைகளை எதிரீடு செய்ய முடியும், எனவே, இந்த | நிலுவைத் தொகையை வசூலிக்க சபை தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| மற்றும் ரூபா.147,908,237 தொகையானது இரண்டு (02) வருடத்திற்கு மேலாக நிலுவையில் உள்ளது. இது பெற வேண்டிய மொத்த தொகையில் 8 வீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.<br>ரூபா.689,634,512 தொகையானது மூன்று (03) வருடத்திற்கு மேலாக நிலுவையில் உள்ளது. இது மொத்த நிலுவைத் தொகையில் 39 வீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.<br>அதன்படி, நீண்டகாலமாக நிலுவையில் உள்ள பெற வேண்டிய மீள் காப்புறுதி மீதிகளை மீளப்பெறுவதற்குத் போதுமான நடவடிக்கைகளை நிறுவனம் எடுத்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | நிலுவைகள் எதிர்காலத்தில் மீட்டெடுக்கப்படும். |
| (ஆ)31 டிசம்பர் 2022 இல் பெறவேண்டிய உள்நோக்கிய மீள்காப்புறுதி தவணை தொகை ரூபா.1,105 மில்லியன், பெறவேண்டிய முதன்மைக் காப்புறுதி எஸ்.ஆர்.சி.சி (மோட்டார் அல்லாத) தொகை ரூபா.49 மில்லியன், பெறவேண்டிய முதன்மைக் காப்புறுதி எஸ்.ஆர்.சி.சி (பெறவேண்டிய மோட்டார்) தொகை ரூபா.28 மில்லியன் மற்றும் பெறவேண்டிய பொதுக் காப்புறுதி (மோட்டார் அல்லாதது) தொகை ரூபா.18 மில்லியன் ஆகியவை 1 முதல் 3 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், நீண்டகாலமாக நிலுவையில் உள்ள பெறவேண்டிய மீதிகளை வசூலிக்க சபை வினைத்திறனான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | அந்த காப்புறுதி கம்பனிகளுக்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் மாதாந்த நினைவூட்டல்களை அனுப்புகிறது. |

1.7 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் பற்றிய குறிப்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ)2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்தின் பிரிவு 13(e) | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், நிதியம் தொடர்பாக ஒரு பொதுவான கணக்கும் மற்றும் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் பிரிக்கக் கூடிய தனியான கணக்கும் பேணப்பட வேண்டும். இருப்பினும், தனிப்பட்ட உறுப்பினர்களுக்கான பிரிக்கக் கூடிய தனியான கணக்குகள் நிதியத்தால் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | தனிப்பட்ட கணக்கு விவரங்கள் தகவல் அமைப்பில் பராமரிக்கப்படுகின்றன. கட்சிக்காரர் தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்தி அவற்றை அணுகுதல் சாத்தியமாகும். | சபையானது சட்டத்தின் பொருந்தக்கூடிய விதிகளுக்கு இணங்க வேண்டும். |
| (ஆ)2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்தின் பந்தி 23 | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், அத்தகைய காப்புறுதி கம்பனிகள் துல்லியமாக நிதியத்திற்கு திரட்டப்பட்ட தொகையை விலைப்பட்டியலிட்டு அனுப்பியுள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்காக காப்புறுதிக் கம்பனியின் பதிவுகளை ஆய்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை சபை எடுக்கவில்லை. மீளாய்வுக்குட்பட்ட ஆண்டிற்கு ஒரு காப்புறுதி கம்பனி மாத்திரம் உள்ளக கணக்காய்வு திணைக்களத்தினால் பரிசோதிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | சபை அவதானிப்புடன் உடன்படுகிறது. வழக்கமாக, உள்ளக கணக்காய்வுப் பிரிவு காப்புறுதிக் கம்பனிகளின் வருமான சரிபார்ப்பை மேற்கொள்கிறது. இருப்பினும், ஊழியர் பற்றாக்குறை காரணமாக, இந்த சரிபார்ப்பு திருப்திகரமாக செயல்படுத்தப்படவில்லை. இருப்பினும், மேலதிக பணியாளர்களைக் கொண்டு உள்ளக கணக்காய்வுப் பிரிவை வலுப்படுத்திய பிறகு, இந்த சரிபார்ப்புகள் திறம்பட செய்யப்படும். | சபையானது சட்டத்தின் பொருந்தக்கூடிய விதிகளுக்கு இணங்க வேண்டும் மற்றும் முழுமையான மற்றும் சரியான நேரத்தில் வருவாய் வசூலிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (இ)நிதி ஒழுங்குவிதிகள் | கொடுப்பனவு கைச்சாத்துக்களின் | அவதானிப்புடன் உடன்படுகிறது. இருப்பினும், | முகாமைத்துவம் நிதிப் பிரமாணத்தில் உள்ள |

| | | | |
|---|---|---|---|
| 261(1) | வரிசைமுறை ஒழுங்காக பராமரிக்கப்படவில்லை. | இந்த கட்டளையானது முதலீடு மற்றும் நிதி பரிமாற்ற பரிவர்த்தனையில் உள்ளது. அந்த வகையான பரிவர்த்தனைகளுக்கு, ஒரு தனி வரிசை பராமரிக்கப்படுகிறது. | தேவைப்பாடுகளை கடைபிடிக்க வேண்டும். |
| (ஈ)நிதி ஒழுங்குவிதிகள் 386(7) | காசோலைகள் ரத்துச் செய்யப்பட்டாலும் கூட அது அடியிதழோடு பொருத்தப்பட்டு காசோலைப் புத்தகத்தில் தக்கவைக்கப்பட வேண்டும். சபையானது கொடுப்பனவுக் கைச்சாத்தோடு காசோலை அடியிதழை இணைத்திருக்கிறது. இதன் விளைவாக, உறுச்சீட்டு ஏதேனும் இடம் தவறி விட்டால் ரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் தொடர்பான அனைத்து விபரங்களும் தொலைந்து போகலாம். | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அவதானிப்புடன் உடன்படுகிறது. | முகாமைத்துவமானது நிதித் தகவல்களைப் பாதுகாக்க நிதிப் பிரமாணத்தில் உள்ள தேவைப்பாடுகளை கடைபிடிக்க வேண்டும். |
| (உ)நிதி ஒழுங்குவிதிகள் 446(1)(இ) | வேலைநிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத நிதியத் (SRCC & Tr Fund) திணைக்களமானது காசேட்டினை இன்றுவரை எழுதியிருக்கவில்லை, மற்றும் தினசரி அல்லது மாதாந்த அடிப்படையில் மொத்தப்படுத்தியோ சமப்படுத்தியோ இருக்கவில்லை மற்றும் மேற்பார்வை அல்லது பொறுப்பான பணி அதிகாரி மூன்று (03) வங்கிக் கணக்குகள் தொடர்பான பணப் புத்தகத்தில் கையெழுத்திட்டிருக்கவில்லை. | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அவதானிப்புடன் உடன்படுகிறது. இருப்பினும், தற்போது இது துல்லியமாக தொடர்கிறது. | முகாமைத்துவமானது நிதி பிரமாணங்களில் உள்ள தேவைப்பாடுகளை கடைபிடிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ)2022 சனவரி 18 ஆம் திகதியிடப்பட்ட பிஈடி 2/2022 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 4 | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், கையடக்கத் தொலைபேசிகள் கொள்வனவு செய்வதற்கான செலவை அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் ஏற்க வேண்டும். இருப்பினும், சபையானது 2022 ஆம் ஆண்டிற்காக ரூபா.220,000 செலவு செய்வதன் மூலம் ஊழியர்களுக்கான கையடக்கத் தொலைபேசிகளை கொள்வனவு செய்திருந்ததுடன் ரூபா.12,200 செலவு செய்வதன் மூலம் ஊழியர்களுக்கான கையடக்கத் தொலைபேசிகளை திருத்தம் செய்துள்ளது. மேலும், சபையினால் 2016 முதல் 2022 வரையிலான காலகட்டத்தில் வாங்கிய கையடக்கத் தொலைபேசிகளுக்கு ரூபா.2,821,071 மொத்தச் செலவு செய்யப்பட்டிருந்தது. | வணிகத் தேவைகளைப் பூர்த்தி செய்ய, உத்தியோகபூர்வ செயல்பாடுகளின் பொருட்டு, ஊழியர்களுக்கு கையடக்கத் தொலைபேசிகளை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் கொள்வனவு செய்ய வேண்டும் என்பது தெளிவான உண்மையாகும். அதற்கு மேலதிகமாக, அவை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் சொத்துக்களாகப் பதிவு செய்யப்பட்டு (இருப்பேட்டிற்கு எடுக்கப்பட்டது), பயன்பாட்டிற்காக ஊழியர்களுக்கு ஒதுக்கப்படுகின்றன, மேலும் வேலையை விட்டு விலகும் போது அல்லது காலத்தின் முடிவில் ஒதுக்கப்பட்ட கையடக்கத் தொலைபேசிகளை நிதியத்திற்குத் திருப்பியளிக்க வேண்டும். எனவே, இது சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தனியார் கைப்பேசிக்கான பணம் பெறுதல் அல்ல. அதன்படி, மடிக்கணினிகள், கையடக்கத் தொலைபேசிகள், கையேட்டுக் கணனிகள் தேவைகளுக்கு ஏற்ப ஊழியர்களுக்கு வழங்க முடியும். | முகாமைத்துவம் சுற்றறிக்கையில் உள்ள தேவைப்பாடுகளை கடைபிடிக்க வேண்டும். |
| (எ)அரசுக்கு சொந்தமான முயற்சிகளுக்கான பெருநிறுவன ஆளுகைக்கான 2021 வழிகாட்டுதல்களின் 2.2.2(ஆ)(xii) | வழிகாட்டுதலின் பிரகாரம், சபைத் துணைக் குழுக்களின் நியமனம் மற்றும் முறையான செயல்பாட்டை சபை உறுதி செய்ய வேண்டும். எவ்வாறாயினும், இடர் | சபையானது அவதானிப்புடன் உடன்படுகிறது. தொற்றுநோய் காரணமாக இது நடைமுறையில் இல்லை. மேலும், மீளாய்வு செய்யப்பட வேண்டிய காலகட்டத்தில் குறிப்பிடத்தக்க தொடர்புடைய கட்சிப் | முகாமைத்துவம் பெருநிறுவன நல்லாளுகையில் உள்ள தேவைப்பாடுகளை கடைபிடிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| வழிகாட்டுதல் | குழு, தொடர்புடைய கட்சி கொடுக்கல் வாங்கல்கள் மீளாய்வுக் குழு போன்ற சபைத் துணைக்குழுக்கள் மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில் செயற்பட்டிருக்கவில்லை. | கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் இடம்பெறவில்லை. | |
| (ஏ)2017 பெருநிறுவன ஆளுகையின் சிறந்த நடைமுறைக்கான கொள்கை G.2 குறியீடு | சபை ஒரு தலைமை தகவல் பாதுகாப்பு அதிகாரியை (CISO) நியமிக்கவில்லை அல்லது அந்த நிறுவனத்திற்காக இணைய பாதுகாப்பு இடர் முகாமைத்துவக் கொள்கை உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது பெருநிறுவன நல்லாளுகையின் சிறந்த நடைமுறை குறியீடு 2017 பகிரங்கமாக பட்டியலிடப்பட்டுள்ள கம்பனிகள் மற்றும் பிற பெரிய கம்பனிகளால் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் தற்போது கிடைப்பனவாக இருக்கிறது மற்றும் தகவல் தொழிநுட்ப முகாமையாளருடன் நியமிக்கப்பட்டது. | முகாமைத்துவம் பெருநிறுவன நல்லாளுகையில் உள்ள தேவைப்பாடுகளை கடைபிடிக்க வேண்டும். |

**1.8 முதலீட்டு நடவடிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ)அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கான செயல்பாட்டுக் கையேட்டின் வழிகாட்டுதல் 6.2(iii) இன் பிரகாரம், முதலீட்டுக் குழு ஒவ்வொரு மாதமும் சபையிடம் அறிக்கையிட வேண்டும், அதன் ஒப்புதலுக்கான முடிவு மற்றும் சபையால் அங்கீகரிக்கப்பட்ட வரம்புகளுக்கு அப்பால் முதலீட்டு பரிந்துரைகளைத் தொடர ஒப்புதல் பெற வேண்டும். மேலும், முதலீட்டுக் கொள்கையின் 17வது பத்தியின் பிரகாரம், முதலீட்டுக் குழு அவ்வப்போது கூடி, முதலீட்டுக் குழுவின் பொறுப்புகள் வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், | 27 டிசம்பர் 2022 அன்று முதலீட்டுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இருப்பினும், முதலீட்டுக் குழுவின் தலைவராக இருந்த குழு உறுப்பினர் பதவி விலகியதால் அந்தக் குழு மீண்டும் நியமிக்கப்பட வேண்டியிருந்தது. எனவே, மார்ச் 2023 இல் திட்டமிடப்பட்ட படி முதலீட்டுக் குழுக் கூட்டம் நடத்தப்படவில்லை. புதிய குழு உறுப்பினர் மாற்றத்துடன், முதலீட்டு நடவடிக்கைகளை மதிப்பாய்வு செய்ய தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியமானது முதலீட்டுக் குழுக் கூட்டத்தை 04/07/2023 அன்று ஏற்பாடு செய்யும்.<br>எவ்வாறாயினும், பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அரச முயற்சிகளுக்கான செயல்பாட்டுக் கையேட்டின் பிரகாரம்,<br>கடந்த இரண்டு ஆண்டுகளில் ஆண்டுக்கு குறைந்தபட்சம் ரூபா. 30 பில்லியன் நிலையான வருமானம் கொண்ட SOEகளின் சபைகள் எனவே, இந்தப் | விவேகமான முதலீட்டு முடிவுகளை உறுதி செய்வதற்காக முதலீட்டுக் குழுவின் பயனுள்ள செயல்பாட்டை சபை உறுதி செய்யும். |

| | | |
|---|---|---|
| மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கான முதலீட்டுக் குழு கூடியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | பிரிவின் கீழ் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு எந்தத் தேவைப்பாடும் இல்லை. | |
| (ஆ)முதலீட்டுக் கொள்கையில் (ஐபி) குறைந்த பட்சம் வருடாந்தமாவது வழக்கமான அடிப்படையில் ஐபியை மதிப்பாய்வு செய்வதற்கான விதிகள் எதுவும் காணப்படவில்லை.<br>மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்காக சபையால் ஐபி மதிப்பாய்வு செய்யப்பட்டது. இருப்பினும், 31 மே 2023 வரை ஐபி இல் தேவையான மேம்பாடுகள் இணைக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய முதலீட்டுக் கொள்கை மதிப்பாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்டது. இது மேலும் மதிப்பாய்வு செய்ய முதலீட்டுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும். | சபையானது உள்ளகக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை அவ்வப்போது வழக்கமான அடிப்படையில் மதிப்பாய்வு செய்ய வேண்டும். |
| (இ)முதலீட்டுக் கொள்கையின் பிரகாரம், பொருளாதார நிலைமைகள், வட்டி விகிதங்களின் நடத்தை, எதிர்காலப் போக்குகள் மற்றும் சபையின் செயல்பாட்டு காசுப்பாய்ச்சல்த் தேவை ஆகியவற்றின் மதிப்பீட்டின் அடிப்படையில் முதலீடுகளின் தேர்வு உள்ளது. எவ்வாறாயினும், முதலீட்டு முடிவுகளை விவேகமான முறையில் எடுக்க, அதிகப்படியான காசுப்பாய்ச்சல்கள் மற்றும் அந்த காசுப்பாய்ச்சல்களின் நேரத்தை அடையாளம் காண காசுப்பாய்ச்சல் முன்னறிவிப்புகள் எதுவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு காசுப்பாய்ச்சல் தயாரிக்கப்படவில்லை. நிதியத்தினுடைய வணிகத்தின் தன்மையைப் பொறுத்து, திரவத்தன்மைத் தேவைப்பாடு மற்றும் நிதி இருப்பு ஆகியவை காலம் மற்றும் தொகை பற்றிய முதலீட்டு முடிவை எடுப்பதற்கு முன் தினமும் கண்காணிக்கப்படும்.எனவே, காசுப்பாய்ச்சல் முன்கணிப்பின் அடிப்படையில் அல்லாமல் உண்மையான உருப்படிகளின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. தினசரி மீதி மற்றும் முதலீட்டு அறிக்கையின் அடிப்படையில் தினசரி பண இருப்பு மற்றும் அதிகப்படியான நிதி அடையாளங்காணப்படுகிறது.தினசரி முதலீட்டு முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்பதால்,நிதி அதிகாரக் கையளிப்பின் கீழ்,சபையானது அதன் அதிகாரத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் முதலீட்டுக் குழுவிடம் ஒப்படைத்திருந்தது. | எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் மற்றும் முதலீட்டு முடிவுகளை விவேகமான முறையில் எடுக்கும் நேரத்தைக் கண்டறிய காசுப்பாய்ச்சல் முன்கணிப்பைத் தயாரிக்க முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா.6,049,158,366 ஆனது வரிக்குப்பின் இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா.5,127,770,399 ஆக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா.921,387,969 தொகையான அதிகரிப்பொன்று

அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தேறிய உழைத்த தவணைப்பணத்தில் ஏற்பட்ட ரூபா.2,305,263,773 அதிகரிப்பும், மற்றும் ஏனைய வருமானத்தில் ஏற்பட்ட ரூபா.3,497,689,632 அதிகரிப்பும் முன்னேற்றத்திற்கான காரணங்களாகும்.

**2.2 பிரதான வருமான செலவின விடயங்கள் தொடர்பான போக்கு பகுப்பாய்வு**

| ஆண்டு | 2022 ரூபா. | 2021 ரூபா. | வேறுபாடு ரூபா. | வேறுபாடு விகிதாசாரத்தில் |
|---|---|---|---|---|
| தேறிய உழைத்த தவணைப்பணம் | 19,917,476,462 | 17,612,212,689 | 2,305,263,773 | 13% |
| ஏனைய வருமானம் | 5,087,817,415 | 1,590,127,783 | 3,497,689,632 | 220% |
| தேறிய நலன் மற்றும் உரிமைக்கோரல்கள் | (14,693,275,021) | (10,761,281,045) | (3,931,993,976) | 37% |
| எழுதப்பட்ட மற்றும் கையகப்படுத்தல் செலவு | (1,996,068,323) | (1,863,920,737) | (132,147,586) | 7% |
| ஏனைய செயற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவு | (560,176,052) | (388,977,070) | (171,198,982) | 44% |
| வருமான வரி | (1,698,105,721) | (1,047,206,674) | (650,899,047) | 62% |
| ஆண்டிற்கான இலாபம் | 6,049,158,368 | 5,127,770,399 | 921,387,969 | 18% |

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

கணக்காய்வுக்கு கிடைத்த நிதி அறிக்கைகள் மற்றும் தகவல்களின் படி, கடந்த நான்கு ஆண்டுகளுக்கான சில முக்கிய விகிதங்கள் பின்வருமாறு.

| **விகிதம்** | **2022** | **2021** | **2020** | **2019** | **2018** |
|---|---|---|---|---|---|
| தக்க வைப்பு விகிதம் | 177% | 174% | 161% | 143% | 138% |
| மொத்த உரிமைக்கோரல் விகிதம் | 48% | 58% | 46% | 60% | 72% |
| செலவு விகிதம் | 13% | 8% | 12% | 16% | 16% |
| ஒருங்கிணைந்த விகிதம் | 61% | 67% | 57% | 76% | 87% |
| வருமான வளர்ச்சி | 30% | 1% | 6% | 18% | 18% |
| இலாப விகிதம் | 69% | 56% | 90% | 24% | 34% |
| தேறிய இலாபம் | 24% | 26% | 40% | 18% | 21% |
| சொத்து மீதான திரும்பல் விகிதம் | 21% | 20% | 37% | 17% | 19% |
| உரிமை மீதான திரும்பல் விகிதம் | 43% | 38% | 83% | 43% | 47% |
| திரவ விகிதம் | 1.0 | 1.4 | 1.2 | 0.68 | 0.74 |
| நடைமுறை விகிதம் | 8.27 | 8.78 | 6.26 | 8.92 | 9.34 |
| மொத்தச் சொத்துக்களுக்கு நிதிச் சொத்துக்கள் | 71% | 81% | 82% | 77% | 76% |
| சொத்துப் புரள்வு | 1.34 | 1.12 | 1.34 | 2.46 | 2.17 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 அடையாளங் காணப்பட்ட இழப்புகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வேலைநிறுத்தம் கலவரம் சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத நிதியத்தின் (எஸ்.ஆர்.சி.சி) நிதியைப் பயன்படுத்தி மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டிற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு இரண்டு சம தவணைகளில் கூடுதல் கட்டண வரியாக ரூபா.1,196,274,044 ஐ சபை 2022 ஆம் ஆண்டில் செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க கூடுதல் கட்டண வரிச் சட்டத்தின் பிரிவு 6 இன் பிரகாரம், குழுவானது கூடுதல் வரியின் நோக்கத்திற்காக கம்பனியின் பொருளில் இருந்து விலக்கப்பட்டுள்ளது. எனவே, கூடுதல் கட்டண வரிக்கு சபை பொறுப்பாகாது. எனவே, எஸ்.ஆர்.சி.சி நிதியத்திற்க்கு பொறுப்பு அல்லாத வருமான வரி நிலுவைக் கொடுப்பனவு ரூபா.1,196,274,044 நட்டம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது. இந்த தவறான வரி செலுத்துதலால் மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கான சராசரி திறைசேரி உண்டியல் வட்டி விகிதம் 23.73 சதவீதத்தின் அடிப்படையில் 31 மே 2023 இல் எஸ்.ஆர்.சி.சி நிதியத்திற்கு வட்டி வருமானம் ரூபா.274,542,926 ஆனது நட்டமாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அவதானிப்புடன் உடன்படுகிறது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மற்ற வரிப் பொறுப்புகளுக்கு எதிராக எதிரீடு செய்ய தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் உடனடியாக நடவடிக்கை எடுத்துள்ளது. ஏனெனில், ஏற்கனவே செலுத்தப்பட்ட கூடுதல் வரி மற்ற வரிப் பொறுப்பிலிருந்து கழிக்கப்படலாம்.<br>இருப்பினும், இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் மீண்டும் நடக்காமல் இருப்பதை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் உறுதி செய்யும். | சபையானது வரிச் சட்டத்தை சரியாக மதிப்பீடு செய்து, வரி செலுத்துவதற்கு முன் அவர்களின் வரிப் பொறுப்பை அடையாளம் காண வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ)தரவு பிடிப்பு, வணிகத்தின் முக்கிய வகுப்பைப் பிரித்தல், உரிமைகோரல் எண்ணிக்கைகளை வழங்குதல் மற்றும் உரிமைகோரல் கையாளுதல் செலவுகள் தொடர்பான பரிந்துரைகள் 2019 ஆம் ஆண்டிலிருந்து செய்யப்பட்டன. எவ்வாறாயினும், நிறுவனத்தின் தரவு நம்பகத்தன்மையை அதிகரிக்க தேவையான மேம்பாடுகளைச் செய்ய, 2019 ஆம் ஆண்டு முதல் மதிப்பீட்டு அறிக்கை குழு மட்டத்திலோ அல்லது முகாமைத்துவத்தின் பொருத்தமான மட்டத்திலோ கலந்துரையாடப்பட்டதா என்பதற்கு போதுமான ஆதாரங்களைப் பெற முடியவில்லை. | இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவின் வழிகாட்டுதலின் தேவைப்பாட்டின் பிரகாரம் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் 75% தரவு நம்பிக்கை அளவைக் கொண்டிருப்பதால், தரவு நம்பிக்கை நிலை தேவையை மேலும் அதிகரிக்கவோ குறைக்கவோ இல்லை என்பதை தயவுசெய்து குறித்துக்கொள்ளவும். தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியமானது சபை மட்டத்தில் மதிப்பீட்டு | சபையின் தரவு நம்பகத்தன்மை மட்டத்தை மேம்படுத்த,ஆயுட்கால கணிப்பாளரால் செய்யப்பட்ட பரிந்துரைகளைச் செயல்படுத்த தேவையான நடவடிக்கைகளை முகாமைத்துவம் எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அறிக்கைகளை விவாதிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். | |
| (ஆ)தீர்மானமெடுப்பதற்கு தேவையான ஆயுட்கால மதிப்பீட்டு தகவல்களை சேகரிக்க், தக்கவைக்க மற்றும் ஆயுட்கால மதிப்பீட்டாளர் மற்றும் தேவையான கட்சியினருக்கு வழங்க சபையினால் ஒரு ஆயுட்கால மதிப்பீட்டு பிரிவு நிறுவப்படவில்லை. | சபைக்கு ஒரு ஆயுட்கால மதிப்பீட்டு பிரிவு நிறுவப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இது தொடர்பான தகவல்கள் நிதிப் பிரிவால் வழங்கப்பட்டு கொண்டிருக்கின்றது. | மதிப்பீட்டு செயல்பாட்டின் திறமையான செயல்பாட்டை முகாமைத்துவம் உறுதி செய்ய வேண்டும். |
| (இ)மீள் காப்புறுதி உரிமைக்கோரல் செயல்முறையைக் கையாளுவதற்கான ஆவணப்படுத்தப்பட்ட கொள்கை மற்றும் செலுத்த வேண்டிய கடப்பாடுகளை அடையாளம் காண்பதற்கு சபைக்கு கிடைப்பனவு அற்ற தன்மையாக இருக்கிறது. எனவே, முதன்மை அறிக்கை ஆவணத்திலிருந்து மீள் காப்புறுதி கடப்பாட்டினை சபை அடையாளம் கண்டு பதிவு செய்கிறது. | தற்போது, முதன்மை தகவல் ஆவணத்தின் அடிப்படையில் உரிமைகோரல் ஒதுக்கங்கள் செய்யப்படுகின்றன. எவ்வாறாயினும், வணிகத்தின் தன்மைக்கேற்ப தொழில்நுட்ப கருத்துகள், நட்டத்தைச் சரிசெய்வோர் அறிக்கை போன்றவற்றைப் பெற்ற பிறகு இறுதி உரிமைக்கோரல் தொகைகள் தீர்மானிக்கப்படுகின்றன என்பது வெளிப்படையானது. வணிகத்தின் தன்மைக்கு ஏற்ப, மேலும், ஒரு புதிய மீள்காப்புறுதி உரிமைகோரல் கையாளுதல் அமைப்பு உள்ளகத்தில் உருவாக்கப்பட்டது மற்றும் அனைத்து தகவல்களும் அமைப்பு மூலம் புதுப்பிக்கப்படும். | சபையின் முக்கிய செயல்பாடுகளுக்கான கொள்கைகள் கிடைப்பனவு உள்ளதாக இருப்பதை முகாமைத்துவம் உறுதி செய்ய வேண்டும். |
| (ஈ)திறமையான திரையிடல் அமைப்பு மற்றும் அக்ரஹார உரிமைக்கோரல் விண்ணப்பங்களுக்கு பணம் செலுத்தும் முறை இல்லாததால், அக்ரஹார நலன்களின் கொடுப்பனவில் நீண்ட கால தாமதம் ஏற்படுவதை அவதானிக்க முடிந்தது. அக்ரஹார உரிமைகோரல் நலன்களின் கொடுப்பனவிற்கான விண்ணப்பங்களை உறுதிச்சீட்டு திகதியின் வரிசையில் பதிவுசெய்து ஏற்றுக்கொள்ளாதது, உறுதிச்சீட்டு நேரத்தில் அதன் துல்லியத்தை சரிபார்த்து ஏற்றுக்கொள்ளாதது, உரிமைக்கோரல் விண்ணப்பங்கள் பெறப்பட்டதை எழுத்துப்பூர்வமாக உறுதிப்படுத்தாதது மற்றும் | தற்போது, கொடுக்கல் வாங்கல் பிரிவில் சமர்ப்பிக்கப்பட்ட அக்ரஹார உரிமைக்கோரல் விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு இரண்டு வாரங்களுக்குள் பணம் செலுத்தப்படுகிறது.தவறுகளை கையாளுவதற்கும் அதே நடைமுறை பின்பற்றப்படுகிறது. இப்போது, கீழ்வருமாறு தபால் மூலம் பெறப்படும் | முகாமைத்துவம் அதன் உள்ளக உரிமைகோரல் கையாளுதல் நடைமுறையை மேம்படுத்துவதன் மூலம் உரிமைகோரல் கையாளுதலில் வினைத்திறனை மேம்படுத்த வேண்டும். |

கணினி அமைப்பில் உள்ள பலவீனங்கள் மற்றும் உள் கட்டுப்பாடு சிக்கல்கள் போன்ற பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன. மேலும், மாதிரி கணக்காய்வின் பிரகாரம், தினசரி செலுத்தப்படும் நலன் விண்ணப்பங்களில் 40% குறைபாடுகள் இல்லாத விண்ணப்பங்கள் மற்றும் 60% குறைபாடுகள் உள்ள விண்ணப்பங்கள் என்பது அவதானிக்கப்பட்டது. 18 மே 2005 திகதியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை 12/2005 இன் பிரிவு 7(ii) இன் பிரகாரம், இந்த நலன்களானவை வாரத்தின் 10 வேலை நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். இருப்பினும், குறைபாடுகள் இல்லாத விண்ணப்பங்களுக்கான உரிமைக்கோரல்களை செலுத்துவதற்கு பொதுவாக சுமார் 40 நாட்களும் மற்றும் குறைபாடுகள் உள்ள விண்ணப்பங்களுக்கு ஒரு வருடத்திற்கும் மேலான (420 நாட்கள்) காலமும் எடுக்கிறது.

விண்ணப்பங்களுக்கு விண்ணப்பிக்க இந்த செயல்முறையை மேலும் மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

-தபால் மூலம் பெறப்பட்ட அக்ரஹார உரிமைக்கோரல் விண்ணப்பங்களை சரிபார்த்து ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

-தேவையான ஆவணங்களுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களுக்கு ஒப்புகைச் சீட்டை வழங்கப்படுகிறது.

-பூரணமடையாத உரிமைக்கோரல் விண்ணப்பங்களுக்கு மேலதிக ஆவணங்களைக் கோரிய கடிதத்தை முதல் படியில் அனுப்ப ஏற்பாடு செய்யப்படுகிறது.

-மேலும், அடுத்த இரண்டு வாரங்களுக்குள் பின்னிணைப்பு செயல்முறையை விரைவுபடுத்த, தனியான குழுவை வரிசைப்படுத்துகிறது.

-கணினி அமைப்பில் ஏதேனும் பிழை ஏற்பட்டால், அது தகவல் தொழிநுட்பப்பிரிவால் சரி செய்யப்படுகிறது மற்றும் பிழைகளைக் குறைப்பதற்கும், உள்ளக கட்டுப்பாடுகளுக்கு சில வரம்புகளை ஏற்படுத்துவதற்கும் கணினியில் பல முன்னேற்றங்களைச் செய்கிறது.

| | | |
|---|---|---|
| (உ)தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் மூலம் பொதுக் காப்புறுதி கம்பனிகளுக்குச் செலுத்த வேண்டிய இறுதி செய்யப்பட்ட காப்புறுதி உரிமைக்கோரல்கள் ரூபா.71,478,209 செலுத்தப்படாததால், முதன்மைக் காப்புறுதி கம்பனிகளிடமிருந்து நிதியத்திற்குத் திரும்பப் பெற வேண்டிய ரூபா.2,046,620,122 தொகைக்கு ஜனவரி 2022 முதல் மார்ச் 2023 வரையிலான 15 மாதங்களாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, வட்டி வருமானம் ரூபா.567,853,300 நிதியத்திற்கு நட்டமாக காணப்பட்டது. | பதில்கள் சபையால் வழங்கப்படும். | சபைக்கு ஏற்படும் இழப்பைத் தவிர்க்க, முதன்மைக் காப்புறுதி கம்பனிகளிடமிருந்து காப்புறுதி தவணைப் பணத்தை வசூலிக்க, முதன்மைக் காப்புறுதி கம்பனிகளுக்குக் காப்புறுதி உரிமைக்கோரல்களை சபையானது சரியான நேரத்தில் செலுத்த வேண்டும். |
| (ஊ)31 டிசம்பர் 2012 திகதியிடப்பட்ட அசாதாரண வர்த்தமானி அறிவித்தல் எண் 1791/4 இன் பிரகாரம், ஒவ்வொரு பொது மீள்காப்புறுதியிலிருந்தும் எழும் மொத்தப் பொறுப்பின் மீது காப்புறுதியாளர் செலுத்த வேண்டிய சதவீதமாக முப்பது சதவிகிதமும், அத்தகைய காப்புறுதியாளர் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சபையில் மீண்டும் காப்புறுதி செய்ய வேண்டும். இருப்பினும், முறையான ஆய்வு இல்லாமல், 2009 ஆம் ஆண்டில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சபையால் மேற்கொள்ளப்பட்ட மீள்காப்புறுதிப் பொறுப்பு அதிகபட்சமாக ரூபா.5 பில்லியனாக வரையறுக்கப்பட்டதுடன் 12 ஜுன் 2020 அன்று நடைபெற்ற சபைக் கலந்துரையாடல் எண். 163-06 இல், இது ரூபா.7.5 பில்லியனாக திருத்தப்பட்டது. இதன் காரணமாக, மேற்கூறிய வர்த்தமானியின் பிரகாரம் மீள்காப்புறுதி ஒப்பந்தங்களில் இருந்து முப்பது சதவீத அபாயம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை, இதன் காரணமாக 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மட்டும் நிதியத்திற்கு மொத்த வருமான இழப்பு ரூபா.657.2 மில்லியன் ஆகும். | பதில்கள் சபையால் வழங்கப்படும். | இடர் மற்றும் இலாபத்தை சிறப்பாக முகாமைத்துவம் செய்ய பொது காப்புறுதி கம்பனிகளிடமிருந்து காப்புறுதி இடரை ஏற்றுக்கொள்வதில் சபை விவேகத்துடன் செயல்பட வேண்டும் |
| (எ)வாடிக்கையாளர்களுக்கு தரமான மற்றும் உடனடி சேவையை வழங்குவதற்காக ரூபா.21.5 மில்லியன் செலவில் 2021 ஆம் ஆண்டு முழு வசதியுடன் கூடிய அழைப்பு மையம் செயல்படுத்தப்பட்டது. இது ஒரே நேரத்தில் 15 வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்கும் திறனைக் கொண்டுள்ளது. தற்போது, ஒரு நாளைக்கு சராசரியாக 1700 தொலைபேசி அழைப்புகள் | - தற்போது, அழைப்பு மையம் முழுவதுமாக ஆக்கிரமிக்கப்பட்டு இயங்குகிறது. முன்னதாக, அக்ரஹார உரிமைகோரல்களின் அதிக பின்னிணைப்பு காரணமாக, அழைப்பு மையத்திற்கு பெறப்பட்ட 50% அழைப்புகள் | முகாமைத்துவமானது வாடிக்கையாளர் சேவையை கையாளவும் மற்றும் உரிமைகோரல் விண்ணப்பங்களை சரியான நேரத்தில் செயல்படுத்தவும் போதுமான மற்றும் |

வருவதை அவதானிக்க முடிந்தது, மேலும் தொலைபேசி அழைப்பு மையம் நிறுவப்பட்ட திகதியிலிருந்து (பிப்ரவரி 2021) டிசம்பர் 2022 வரை அழைப்பு மையத்திற்கு பெறப்பட்ட மொத்த அழைப்புகளின் எண்ணிக்கை 734,626 ஆகும். பதிலளித்த மொத்த அழைப்புகளின் எண்ணிக்கை 312,350 மற்றும் நிராகரிக்கப்பட்ட அழைப்புகளின் எண்ணிக்கை 422,250 ஆகும். அதன்படி, கடந்த இரண்டு ஆண்டுகளில் அழைப்பு மையத்திற்கு வந்த மொத்த அழைப்புகளில் ஐம்பத்தேழு சதவீதம் (57%) பதிலளிக்க முடியாமல் நிராகரிக்கப்பட்டது. எனவே, வாடிக்கையாளர்கள் தங்களின் பிரச்சினைகள் மற்றும் சேவைகள் குறித்து பெருநிறுவன உத்தியோகபூர்வ சமூக ஊடகங்கள் ஊடாக தமது அதிருப்தியை வெளிப்படுத்தியதை அவதானிக்க முடிந்தது. விசாரணையின் போது, அழைப்பு மையத்திற்கு போதிய மற்றும் பயிற்சி பெற்ற ஊழியர்களை நியமிக்க நிதியத்தின் முகாமைத்துவம் தவறியது தெரியவந்தது. அழைப்பு மையத்தில் 15 பயனர்களுக்கு வசதிகள் வழங்கப்பட்டிருந்தாலும், கணக்காய்வின் சில நாட்களில் பௌதீக அவதானிப்புகளின் பிரகாரம், அழைப்பு மையத்தில் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை 4-5 பேர் மட்டுமே என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், அக்ரஹார நலன்களுக்கான விண்ணப்பங்கள் நியாயமான காலத்திற்குள் செலுத்தப்படாமையே அழைப்பு மையத்திற்கு அழைப்புகளின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரிப்பதற்குக் காரணம் என்பது அவதானிக்கப்பட்டது.

தானாகவே கைவிடப்பட்டன. இருப்பினும், தற்போது, பின்னிணைப்பு குறைவாக உள்ளது மற்றும் போதுமான முகவர்கள் முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, அழைப்பு மையத்திற்கு வந்த அழைப்புகளின் எண்ணிக்கை நிர்வகிக்கக்கூடிய அளவில் உள்ளது.

திறமையான மனித வளங்களை அழைப்பு மையத்திற்கு ஒதுக்க வேண்டும்.